**ஹோமாகம பிரதேச சபை**

**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 11 ஆந் திகதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 செப்தெம்பர் 25 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஒக்தோபர் 16 ஆந் திகதியன்றும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் பாதகமான அடிப்படைக்கான பகுதியில் விபவரிக்கப்பட்டுள்ள விடயங்களது முக்கியத்துவம் காரணமாக, 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹோமாகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின்போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 23,459,116 பெறுமதியான 09 கட்டிடங்களின் கிரயம் கணக்கிடப்படவில்லை. | கட்டிட நிர்மாண கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட அக் கட்டிடங்களது கிரயம் ஆகிய ரூபா 23,456,116 தொகையானது 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் மூலதனமாக்கப்படும். |
| (ஆ) | பழமை வாய்ந்ததும் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டதுமான மற்றும் முன்னைய ஆண்டுகளில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதுமான ரூபா 21,655,609 பெறுமதியுடைய இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும், மோட்டார் வாகனங்கள், வண்டிகள் மற்றும் தளபாடப் பொருத்திகள் தற்போது உள்ளனவா என்பதை உறுதி செய்யாது நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தன. | சொத்துக்கள் தற்போது உள்ளனவா என்பதை உறுதி செய்து நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிலிட வேண்டும். | புதிய கணக்கீட்டு விதிமுறையின் கீழ் சபைக்குரிய சொத்துக்கள் உள்ளதை உறுதி செய்தவாறு அவற்றை மீளப் பெறுமதியிட்டு கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உள்ளவாறு கிடைப்பதற்கில்லாத ரூபா 2,531,143 பெறுமதியான களஞ்சியப் பொருட்கள் களஞ்சியப்பொருட்களாக கையிருப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தன. | ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கையிருப்பு மீதியை கணிப்பிட்டுக் கணக்கில் காட்ட வேண்டும். | உள்;ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் (கொழும்பு மாவட்டம்) தலையீடு செய்ததன் பேரில் 2012 ஆம் ஆண்டிற்கான பெறுவனவுகள், வழங்கல்கள் என்பன மாத்திரமே கருத்திற் கொள்ளப்பட்டு இந்த வித்தியாசத்தின் ஒரு பகுதி இனங்காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் குழு ஒன்றை இப்பணிக்கு நியமித்துக் குறித்த தகவல்கள் இனங்காணப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஈ) | மீகொட பொருளாதார நிலையத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபையிலிருந்து பெற வேண்டிய தொகை ரூபா 141,750,000 ஆகும். இதற்கான கடன்பட்டோர் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய தொகை கடன்பட்டோராகக் கணக்கிலிடப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இத்தகவல்களைக் கணக்கிலிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறிவிக்கின்றோம். |
| (உ) | மீளாய்வாண்டின்போது கைதவிர்ப்புச் செய்யப்பட்ட ரூபா 77,018 விற்பனைப் பெறுமதியுள்ள பொருட்களின் கிரயத்தைக் கணக்கிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விற்பனை செய்யப்பட்ட பொருட்களது கிரயத்தைக் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | LGD/09/2019(1) ஆம் இலக்கத்தின் பிரகாரம் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கணக்கீட்டு நியமத்தின் கீழ் கணக்குகளைத் தயாரிக்கும் போது சொத்துக்களும் மீள் பெறுமதியிடப்பட வேண்டும். ஆகவே, 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிலையான சொத்துப் பதிவேட்டின் உள்ளவாறான நிலைமையை உறுதி செய்து நாளது வரையாக்க முடியும். குறித்த ஏல விற்பனைப் பெறுமதியைக் குறிக்கும் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள்ளது. |
| (ஊ) | உடன்படிக்கை காலம் முடிவடைந்ததால் கைவிடப்பட்ட 02 வேலைகளுக்கு ரூபா 445,000 கடன்கொடுத்தோர் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சீர்செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் கணக்குத் தயாரிப்பின் போது கடன்கொடுத்தோர் பதிவேட்டிலிருந்து பதிவழிக்கப்படும். |
| (எ) | 2015 மார்ச் 25 அன்று சபையின் வளாகத்திலிருந்த சுவடிக்கூடக் கட்டிடம் தீக்கிரையானதால் ஏற்பட்ட இழப்பு ரூபா 2,117,441 என மதிப்பீடு செய்யப்பட்டபோதும் | சகல தகவல்களும் நிதிக்கூற்றுக்களில் புலப்படுத்தப்பட வேண்டும். | 2019 செப்தெம்பர் தொடக்கம் 2019 டிசெம்பர் வரை அவர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,103,249 சேவைக் கட்டணத்தை எதிரீடு |

| | | | |
|---|---|---|---|
| | அது நிதிக்கூற்றுக்களில் புலப்படுத்தப்படவில்லை. | | செய்வதற்கும் எஞ்சிய ரூபா 14,192 ஐ அவர்களிடமிருந்து அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளோம். அவ்வாறே, இது தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகள் இதுவரை முடிவடையாததால் இறுதிக்கட்டளை பெறப்பட்டதும் உடனடியாக அதனைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஏ) | 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 23,265,026 கூட்டுத்தொகைப் பெறுமதியுடைய சனசமூக நிலையம் மற்றும் மயான நிர்மாணக்கிரயம் என்பன கணக்கிலிடப்படவில்லை. | கட்டிட நிர்மாணக் கிரயம் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 23,265,026 கூட்டுத்தொகைப் பெறுமதியுடைய சனசமூக நிலையத்தினதும் மயானத்தினதும் கிரயம் கணக்கிலிடப்படாததுடன் அப் பெறுமதியை 2020 ஆம் ஆண்டில் சொத்துப் பதிவேட்டிலிடுவதற்குமான நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 08 கணக்கீட்டு விடயங்களது கூட்டுத்தொகைப் பெறுமதிக்கும் அதனோடு தொடர்புடைய பட்டோலையில் உள்ள கூட்டுத்தொகைக்கும் இடையே நிலவிய வித்தியாசம் ரூபா 141,084,349 ஆகும். | மீதிகளைக் கணக்கிணக்கம் செய்து சீராக்கப்பட வேண்டும். | சீராக்கக்கூடிய வித்தியாசமாயின் 2020 ஆம் ஆண்டில் சீராக்கப்படும் சில மீதிகளின் வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டுபிடிக்க முடியாதுள்ளது. |

**1.3.3 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளைச் சமர்ப்பிக்காததால் ரூபா 446,262,801 பெறுமதியான 04 கணக்கீட்டு விடயங்களைத் திருப்திகரமாகச் சான்றுதிப்படுத்த /சரி, பிழை பார்ப்பதற்கு முடியவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதி செய்யும் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த பட்டோலை சமர்ப்பிக்கப்படும். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அதிகாரச் சட்டம் | தீர்வையை அறவிடுவதற்கு சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் சகல அசையாத சொத்துக்களும் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயினும், ஹோமாகம பிரதேசத்தில் 09 ஆண்டுகளுக்கு முன்னர் பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலேயே தீர்வை, வரி அறவிடப்பட்டிருந்தன. | சகல அசையும், அசையாச் சொத்துக்கள் காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | ஹோமாகம பிரதேசத்தில் 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டில் செயற்படுகின்றது. இம் மதிப்பீட்டை மீளாய்வு செய்யுமாறு 2016 முதல் விலை மதிப்புத் திணைக்களத்திடம் கேட்டுக்கொண்டதன் பயனாக 2019 தொடக்கம் மதிப்பீடு ஆரம்பமாகி உள்ளது. 2020 செப்தெம்பரில் எதிர்பார்க்கப்படும். இம் மதிப்பீடு 2021 முதல் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நி.பி 371(5) | முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 4,424,170 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தீர்வு செய்யப்படாதிருந்தது. | வழங்கப்படும் முற்பணம் தாமதமின்றித் தீர்வு செய்யப்பட வேண்டும். | கண்டுபிடிக்க முடியாத பழைய முற்பணம் ஆகும். |
| (ii) | நி.பி 571 | வைப்பிலிடப்பட்டு 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 34,147,021 முற்பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலங்கடந்த வைப்புகள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தாமதமின்றித் தீர்வு செய்யப்பட வேண்டும். | பதில் 2020 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாகும். |
| (இ) | சுற்றறிக்கைகளும் கடிதங்களும் | | | |
| | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய நகர அபிவிருத்தி | நகர அபிவிருத்தி அதிகார சபைக்கணக்கில் உள்ள தொகையை | ஆக்கபூர்வமான செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட | புரநெகும செயற்திட்டத்தின் மூலம் அமுலாகும் வாகனத் தரிப்பிடத்தின் |

| | | | |
|---|---|---|---|
| அதிகாரசசபையின் 15 ஆம் இலக்க திட்டமிடல் சுற்றறிக்கை | இனங்கண்டு கொண்ட செயற்திட்டம் ஒன்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வேண்டும். | முதல் மாடியை நிர்மாணிக்க இத்தொகையைப் பயன்படுத்துவதற்கு சபையின் 2019.09.19 ஆந் திகதிய 5.11 ஆம் இலக்க முன்மொழிதல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 80,570,990 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 134,926,783 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரித்த வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய் சேகரித்த வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருவாயினது தோற்றுவாய் | மதிப்பிடப் பட்ட வருவாய் | பட்டியலிடப் பட்ட வருவாய் | சேகரித்த வருவாய் | 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருவாய் | பட்டியலிடப் பட்ட வருவாய் | சேகரித்த வருவாய் | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 87,110 | 82,397 | 80,770 | 40,896 | 74,088 | 83,423 | 64,894 | 38,466 |
| (ii) | வாடகை | 17,071 | 18,940 | 19,170 | 115 | 11,367 | 17,320 | 4,438 | 269 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,401 | 4,989 | 5,088 | 12 | 4,101 | 5,269 | 2,849 | - |
| (iv) | ஏனைய வருவாய் | 336,876 | 241,044 | 275,778 | 91,022 | 152,741 | 172,537 | 281,429 | 103,571 |
| | மொத்தம் | 446,458 | 347,370 | 380,806 | 132,045 | 242,297 | 278,549 | 353,610 | 142,306 |

### 2.2.2 தீர்வையும் வரியும்

**தீர்வை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 40,816,082 ஆகும். அதில் 05 ஆண்டுகளுக்கு மேலான ரூபா 6,151,736 மீதி 03 முதல் 05 ஆண்டுகள் வரையிலான | அறவிடப்பட வேண்டிய தீர்வையும் வரியும் தாமதமின்றி அறவிடப்பட | எஞ்சிய நிலுவையை அறவிடுவதற்கு நடமாடும் சேவை நடாத்தப்பட்டது. நிலுவையை 2020.09.30 ஆந் திகதிக்கு முன்னர் வழங்குமாறு நிறைவேற்றுச்சபை கோரியுள்ளது. சொத்து பறிமுதல் |

| | | |
|---|---|---|
| ரூபா 5,518,392 மீது 01 முதல் 03 ஆண்டுகள் வரையிலான ரூபா 22,510,060 மீதி என்பன இருந்தன. | வேண்டும். | உத்தியோகத்தர்களிடம் நிலுவை வருவாயினது நிரல் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே, எதிர்காலத்தில் நடமாடும் சேவையை நடாத்தவும் சொத்துப் பறிமுதல் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 குத்தகை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீகொட பொருளாதார நிலையத்தின் நம்பிக்கைப் பொறுப்புச்சபையிடம் ரூபா 300,000 வருடாந்த வாடகைக்கு ஒப்படைக்கப்பட்ட 1 ஏக்கர் 2 றூட் 10 பர்ச்சஸ் காணியினது 2013 ஆம் ஆண்டிற்கான புதிய மதிப்பீட்டுத் தொகையான ரூபா 900,000 பெறப்படாமையால் 2014 முதல் 2018 வரை பெற வேண்டிய நிலுவையும் தண்டப்பணமும் ரூபா 14,750,000 ஆகிய போதும் சட்ட ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள சபை முயலவில்லை. | பெற வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். | கணக்காய்வில் தெரிவிக்கப்பட்டவற்றை ஏற்றுக்கொள்கின்றோம். மீகொட பொருளாதார நிலைய நம்பிக்கைப் பொறுப்புச்சபையிடம் வருடாந்தக் குத்தகை வாடகை செலுத்தாமை தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சபையின் வழக்கறிஞரிடம் குறித்த தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 91,021,946 ஆகும். | பெற வேண்டிய வருவாயைத் தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்றத் தண்டப்பணக் கட்டணப் பட்டோலையில் காணப்படும் 2016 வரையிலான சகல நீதிமன்றத் தண்டப்பணமும் தற்சமயம் சபைக்குக் கிடைத்துள்ளது. அத்த தகவல்களைப் பயன்படுத்தி நீதிமன்றக் கட்டணக் கணக்கை நாளதுவரையாக்க தற்சமயம் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுசன சுகாதாரம் பொதுப் பாவனைச் சேவை, பொது நெடுஞ்சாலைகள் போன்ற விடயங்களை முறையாக்குதல், நிர்வகித்தல், மக்களின் சுக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பல் என்பவை தொடர்பாக சபை நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாகத் தெரியவந்த விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஹோமாகம பைசர் முஸ்தபா உடற்பயிற்சி நிலையத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 811,100 வருவாய் கிடைத்த போதும், பிரதேச சபையின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் பிறப்பிக்கப்பட வேண்டிய உப விதி தயாரிக்கப்படவில்லை. | வருவாயை ஈட்டலுக்கான உப விதி தயாரிக்கப்பட வேண்டும். | தொடர்புடைய உப விதிகளின் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. அங்கீகரித்ததிற்காகச் சமர்ப்பிக்கப்பட உள்ளது. |

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 நவம்பர் 15 ஆந் திகதியன்று கொம்போஸ்ட் அமைப்பு ஒன்றை நிர்மாணிப்பதற்கு பொதுச்சபை தீர்மானித்திருந்தபோதும் 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அது அமுலாக்கப்படாதிருந்தது. | தாமதமின்றி கொம்போஸ்ட் அமைப்பை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொம்போஸ்ட் அமைப்பை நிர்மாணிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் உள்ள பிரசேதவாகிகளது எதிர்ப்பால் இந் நடவடிக்கை தாமதமாகியது. எனினும், தற்சமயம் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடல் நடைபெறுகின்றது. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வேதர உப அலுவலகத்தில் உள்ள புகார்களைப் பதிவு செய்யும் பதிவேட்டின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் ஆபத்தான மரங்களாக 89 புகார்களும் அத்துமீறிய நிர்மாண வேலைகள் 73 தொடர்பாக புகார்களும் இருந்தன. எனினும், அப் புகார்கள் பெறப்பட்ட திகதி மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பான தகவல்கள் அதில் குறிப்பிடப்படவில்லை. | பொதுசன புகார்கள் தாமதமின்றி நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டும். | வேதர உப அலுவலகத்தில் உள்ள பொதுசன புகார், அபாயகரமான மரங்கள் மற்றும் அத்துமீறிய நிர்மாமண வேலைகள் தொடர்பாகப் புகார் பதிவேட்டில் உள்ள புகார்கள் நானதுவரையாக்கப்படுதற்கான ஆலோசனை வழங்கப்பட்டு தற்சமயம் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மேலதிகமும்** | | |
| 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த பதவியணி வெற்றிடங்கள் 16 ஆகும். மேலதிகம் 02 ஆகும். | அத்தியாவசிய வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி வெற்றிடம் 01. இது ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>நீதிமன்ற வழங்கொன்றின் காரணமாக 01 வருவாய் உத்தியோகத்தர் பதவிக்கு மறு அறிவித்தல் வரை ஆட்சேர்ப்பு மேற்கொள்ளாதிருக்கப் பணிக்கப்பட்டுள்ளது.<br><br>ஆரம்ப மட்டப் பதவிகள் 16 ஆகும். இதில் 04 பதவிகள் 25/2014 பொது நிர்வாக சுற்றறிக்கை ஆட்சேர்ப்புக்கு உட்பட்டதாகும்.<br><br>சாரதி பதவி வெற்றிடம் 01 இதற்கான விண்ணப்பம் பரிந்துரை செய்யப்பட்டு செய்முறைப் பரீட்சைக்கு அனுப்பப்பட உள்ளது. |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதியில் ஓய்வுபெற்ற, சேவை விலகிய, சேவை இடமாற்றம் பெற்ற 28 பேரிடமிருந்து ரூபா 1,522,985 அறவிடப்பட வேண்டியிருந்தது. | ஊழியர் கடன் நிலுவை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வு பெற்ற, சேவை விலகிய, வேலை இடமாற்றம் பெற்ற 28 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,522,985 அறவிடப்படுவதற்கு எதிர்காலத்தில் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| (அ) முற்புனைவுத் தார் உற்பத்தி மற்றும் வீதிகளில் அதனைப் பரவுதல் | | |
| 2018 ஆம் ஆண்டில் சபையின் | சபையின் | மூலப்பொருள் வழங்கலின் |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானப்படி வீதிப் பராமரிப்புக்குத் தேவைப்படும் முற்புனைவுத் தாரை உற்பத்தி செய்யும் பரவும் ஒப்பந்தம் வெளி நிறுவனத்திடம் வழங்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதன்போது, 2019 ஆம் ஆண்டிலும் ரேட் மாற்றம் செய்யப்பட்டு அதே நிறுவனத்திடம் வீதிப் பராமரிப்பு மற்றும் முற்புனைவுத் தார் உற்பத்திக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் மூலப்பொருள் கொள்வனவுக்கு ரூபா 16,031,716 மற்றும் கார்பட் பதிக்காத பிரதேசத்தில் உள்ள ஒழுங்கைகளில் குழிகளை நிரப்புவதற்கு 217 கியூப் முற்புனைவுத் தார் என ரூபா 1,653,456 செலவிடப்பட்டிருந்தது. உற்பத்தி செய்து அதனை பரவுவதற்கு ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 10,384,665 ஆகும்.<br><br>இதன் போது, சபைக்குரிய முற்புனைவுத் தார் உற்பத்திக்கு சபையின் மூலவளத்தை பயன்படுத்தக்கூடியதாக இருந்தும் வெளி நபர்களிடம் வேலை ஒப்படைக்கப்பட்டதால் ரூபா 10,384,665 மேலதிக செலவினம் ஏற்பட்டிருந்தது. | தொழிலாளர்களைப் பயன்படுத்தி சிக்கனமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | போது வழங்குநர்கள் சமர்ப்பித்த கூறுவிலைகள் கருத்திற் கொள்ளப்பட்டு, குழுவின் பரிந்துரைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>எமது சபையில் போதிய இயந்திர சாதனங்களும் பாகங்களும் இல்லாததால் ஒப்பந்தகாரர் ஒருவர் தேவைப்பட்டது. |
| (ஆ) | சுத்திகரிப்புச் சேவையைப் பெறுதல்<br>------------------------------------------------- | | |
| | ஹோமாகம தலைமை அலுவலகம், வேதர உப அலுவலகம், வில்பிரட் சேனாநாயக்கா விளையாட்டு மைதானத்தின் உடற்பயிற்சி நிலையம் மற்றும் பொதுச் சந்தைக் கூட்டுத்தொகுதி என்பவற்றை சுத்திகரிப்பதற்கு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,926,900 | சபை இலாபமடையும் விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிறுவனச் சுத்திகரிப்பிற்கு நிறுவனத்தின் சுகாதாரத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவது சாத்தியமற்றது. ஆகவே, வெளி நிறுவனத்தின் சேவை தேவைப்பட்டது. சுகாதாரத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் ரூபா 1,200 படியாக வழங்கப்படுகின்றது. சுத்திகரிப்பிற்கென 5 |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்தது. சபையில் சம்பளம் பெறும் 44 தொழிலாளர்கள் இருக்கையில் சுத்திகரிப்புக்கு வேறொரு நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டமை பயனற்ற செலவினமாகியது. | | தொழிலாளர்களுக்கு நாளாந்தம் ரூபா 6,000 வழங்கப்படுகின்றது. வெளி நிறுவன சுத்திகரிப்பாளருக்கு நாளாந்தம் வழங்கப்படுவது ரூபா 6,520 ஆகும். சபையின் தொழிலாளர் பயன்படுத்தப்பட்டால் சுத்திகரிப்புப் பொருட்களையும் சபையே வழங்க வேண்டும். இந் நிறுவனம் வழங்கும் ரூபா 6,520 சுத்திகரிப்புச் செலவினத்தையும் உள்ளடக்கும். இதனால் சபை இழப்பிற்குள்ளாகவில்லை எனத் தயவுடன் தெரிவிக்கின்றோம். |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

#### 3.5.1 பொருட்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பொது வசதிகளுக்கென சபைக்கு கிடைத்து தற்போது தனிநபர்களால் பயன்படுத்தப்படும் 09 காணித் துண்டுகளில் பாதுகாப்பு வேலிகளை அமைத்து சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபைக்குரிய காணிகளது பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். | பொது வசதிகளுக்கான காணிக்கு பெயர்ப்பலகைகள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளன. |

#### 3.5.2 பயன்படுத்தப்படாத / முறையாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | ஒரு மின் உற்பத்தி இயந்திரமும், மோட்டார் கிறேடரும் 4 சக்கர சிறு டிறக்டரும், 03 டிறெய்லர்களும், 03 இரும்பு றாக்கைகளும் ரூபா 6,146,250 கூட்டுத்தொகையுடைய கை | மூலவளங்கள் அதிகூடுதலாகப் பயன்படுத்தப்பட வேண்டும். அல்லது கைதவிர்ப்புச் செய்யப்பட | ஏலத்திலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | டிறக்டரைப் பயன்படுத்திப் பெறப்பட்டிருந்தன. இவை பயன்படுத்தப்படாதிருந்தன. | வேண்டும். | |
| (ஆ) | சபையின் பொது நிதி மற்றும் மாகாண சபையின் ரூபா 3,248,058 நிதி ஏற்பாடு என்பவற்றை பயன்படுத்தி நிர்மானித்த பிட்டிபன புதிய இருமாடி நூலகம் பாவனை இல்லாதிருந்தது. | மூலவளம் அதிகளவு பயன்படுத்தப்பட வேண்டும். | பிட்டிபன இருமாடி நூலகக் கட்டிடத்தில் முன்பள்ளி ஒன்றை நடாத்துவதற்கு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது. |

**3.6 இனங்காணப்பட்ட இழப்புகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்தில் ரூபா 198,588 பெறுமதியான 201 கொடிக்கம்பங்கள் குறைவாக இருந்தன. | குறைவிற்கான காரணத்தை அறிந்து பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | பொலிஸில் முறைப்பாடு செய்தும் ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டும் வாய்மொழி மூலம் அறிவுறுத்தப்பட்டும் உள்ளது. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் வேதர உப அலுவலகத்தில் 04 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய சம்பளமற்ற லீவுக்கான ரூபா 118,360 அறவிடப்படவில்லை. | சம்பளமற்ற லீவுக்கான தொகை அறவிடப்பட வேண்டும். | வேதர உப அலுவலகத்தில் 04 ஊழியர்களின் சம்பளமற்ற லீவுக்கான 2019 ஆம் ஆண்டின் ரூபா 118,330 அறவிடப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்ட போதும், நாட்களைக் கணிப்பிடும் போது ஏற்பட்ட தவறால் அது ரூபா 90,632 ஆக மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான நிர்மாண வேலைகள், உடன்படிக்கையுடனான சேவைகளைப் பெறுதல், பொது வசதிக் காணி, சபைக்குச் சொந்தமான சொத்துக்கள், திட்டங்களுக்கான அங்கீகாரம் போன்றவை சம்பந்தமாகப் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | வினைத்திறனுடனான உள்ளகக் கணக்காய்வு செயற்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றதால் தொடர்ச்சியாக உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வது சாத்தியமற்றதாகியது. |